1996 பிப்ரவரி 26]

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அறிவிக்கப்படாவிட்டாலும்,. எடுத்துக் கொள்ளப்படுகிறபோது முன்னுரிமை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 124, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

124--

மோகன் குமாரமங்கலம் மருத்துவமனைக்கு கருவிகள் வழங்குதல்

84281--டாக்டர் வெ. சரோஜா:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ஒரு Body Scan கருவி மற்றும் Steam Laundry ஆகியவை வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் WHOLE `Body Scaner' கருவி வழங்கும் செயற்குறிப்பு தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், `Steam Laundry' ஏற்கனவே அங்கு செயல்பட்டு வருகிறது.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டீம் லாண்டரி அமைத்துக் கொடுத்தமைக்கு மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவியினுடைய பொற்கால ஆட்சிக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவமனை சேலம் மற்றும் தர்மபுரி மாவட்ட மக்களுடைய நலனைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், அம்மருத்துவமனை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளதால்

[1996 பிப்ரவரி 26

அடிக்கடி விபத்துக்கு உள்ளாகும் மக்களுக்கு வைத்தியம் செய்யும் பொறுப்பையும் ஏற்றுள்ள அந்த மருத்துவமனைக்கு 'டோட்டல் பாடி ஸ்கேனர்' அவசியம் என்பதால், மாண்புமிகு இதய தெய்வத்தினுடைய இனிய அரசு இதை மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலைமையின் காரணமாக உடனடியாக ஸ்கேனர் வாங்கிக் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை. இருந்தாலும், இப்போது தமிழக அரசின் சார்பாகத் துவங்கப்பட்டிருக்கின்ற 'மெடிசன் கார்ப்பரேஷன்' மூலமாக அவர்கள் நிதியிலிருந்து இவர்களுக்கு ஸ்கேனர் வாங்கிக் கொடுக்க முடியுமா என்பதைப் பற்றி அரசு தீவிரமாக ஆய்வு செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர். வெ. சரோஜா: பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையில், மக்கள் நல்வாழ்வுத் துறையில், மைய அரசு அமைத்துள்ள அனைத்து இலக்குகளையும் மிஞ்சி, மகத்தான சேவைபுரிந்து, இன்று இந்தியத் திருநாட்டுக்கு வழிகாட்டியாக விளங்கிவரும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் சமீபத்தில் மொரப்பூர் அருகே நடந்த ரெயில் விபத்தின்போது, மீட்புப் பணியில் ஈடுபட்டு சிறப்பாகச் சேவை புரிந்து, அனைத்து நோயாளிகளின் பாராட்டுக்களைப் பெற்றுள்ள மாவட்ட நிர்வாகத்திற்கும், மருத்துவக் கல்லூரி மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் துறையைச் சார்ந்த அரசு ஊழியர்கள் அனைவருக்கும், அவர்கள் புரிந்த சேவையினை நன்றியுடன் நினைவுகூர்ந்து, 'டோட்டல் பாடி ஸ்கேனர்' அமைப்பதற்கு ஆகும் செலவு என்ன; நடப்பு ஆண்டிலே அதை ஏற்படுத்துவதால் மக்களுக்கு விரைவில் நன்மை சென்று அடையும் என்பதால், சிறப்பு நிதியில் ஒதுக்கீடு செய்து, அதை அமைத்துக் கொடுக்க இதய தெய்வத்தின் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நிதி என்றால், சிறப்பு நிதியாக இருந்தாலும், சாதாரண நிதியாக இருந்தாலும் பிரச்சினை ஒன்றாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் இது மிக முக்கியமானது என்று அரசு உணர்ந்து இருக்கிறது. அதன் காரணத்தினாலேதான் இப்போது மெடிசின் கார்ப்பரேஷன் மூலமாக கோவைக்கும், திருநெல்வேலிக்கும் இரண்டு 'டோட்டல் பாடி ஸ்கேனர்'

1996 பிப்ரவரி 26]

வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே அங்கே துவங்க இருக்கிறோம். எனவேதான், இந்த ஆண்டே இங்கே ஒரு 'ஹோல் பாடி ஸ்கேனர்' வாங்க இயலுமா என்பது ஐயமாக இருக்கிறது. ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய்க்கு மேலே செலவாகும் என்று கருதுகிறேன். துல்லியமாக எனக்குத் தெரியவில்லை. சுமார் ஒரு கோடியிலே இருந்து 1¼ கோடி ரூபாய் செலவாகும் என்று கருதப்படுகிறது. எனவே, நிதி நிலைமை அனுமதிக்குமேயானால் கார்ப்பரேஷன் மூலமாக, எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக, சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 'ஹோல் பாடி ஸ்கேனர்' வாங்குவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, இந்த சேலம் மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியானது மிக பழமையான ஆஸ்பத்திரி. இதிலே தினம்தோறும் ஆயிரக்கணக்கிலே நோயாளிகள் வந்து சிகிச்சை பெற்றுச் செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்தப் பகுதியிலே அடிக்கடி விபத்து நடக்கின்ற காரணத்தினாலே, வெளி நாட்டிலேயிருந்து என்.ஆர்.ஐ. மூலமாக வந்து படிக்கின்ற மாணவர்களுடைய நிதியிலே இருந்து இந்த 'ஸ்கேனரை'க் கொண்டுவர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, 'என்.ஆர்.ஐ. ஸ்டூடென்ட்ஸ்' சேர்க்கப்பட்டு அதன் மூலமாக வருகின்ற வருமானம் முழுவதும் அந்தந்தக் கல்லூரியினுடைய டீன் மற்றும் 'புரபசர்ஸ்' கையிலே கொடுக்கப்பட்டு அவர்கள் என்ன பணிகளை அங்கே செய்யவேண்டுமென்று கருதுகிறார்களோ அந்தப் பணிகளைச் செய்து முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, மாணவர்களுடைய வசதிக்காக, 'ஹாஸ்டல்' லைப்ரரி போன்ற அவர்களுடைய வசதிக்காக முதலிலே அந்தப் பணம் செலவழிக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே மருத்துவமனைக்கும், கல்லூரிக்கும் அந்தப் பணம் செலவழிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்த வகையிலே அந்தப் பணம் செலவழிக்கப்பட்டுவருகிறது. ஆனால் இந்த ஆண்டு சேலம் மருத்துவக் கல்லூரிக்கு 'என்.ஆர்.ஐ. ஸ்டூடன்ட்ஸ்' யாரும் வந்து சேரவில்லை. வருகின்ற ஆண்டிலே வந்தால் அந்தப் பணத்தை அதற்காகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

எனவே. எப்படியாவது, 'என்.ஆர்.ஐ.' ஆக இருந்தாலும் சரி அல்லது நம்முடைய 'மெடிசின் கார்ப்பரேஷ'னாக இருந்தாலும் சரி, எப்படியாவது அதற்கான நடவடிக்கையை எடுக்கலாம். காலத்தைத்தான் என்னால் தெரிவிக்க முடியவில்லையேயொழிய, கண்டிப்பாக ஒரு 'ஹோல் பாடி ஸ்கேனர்'ஐ அங்கே கொடுப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் தீவிரமாக மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையிலே 'ஸ்கேன்' ஒரு முக்கியமான அங்கமாக விளங்கி வருகின்ற காரணத்தினால், தமிழ்நாட்டிலேயுள்ள அனைத்து 'டீச்சிங் ஹாஸ்பிடல்' களிலும் இந்த 'டோட்டல் பாடி ஸ்கேனரை' வழங்கிட அரசிடம் திட்டம் உள்ளதா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்னையிலே இரண்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலே, ஸ்டான்லி மற்றும் எம்.எம்.சி. ஆகிய இரண்டிலும் 'டோட்டல் பாடி ஸ்கேனர்' இருக்கின்றன. அதேபோல தஞ்சாவூரிலே சமீபத்திலேதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பணம் ஒதுக்கி வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல, மதுரையிலே இருக்கிறது. இப்போது சமீபத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு திருநெல்வேலியிலேயும் அமைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அமைக்கப்படாமல் இருப்பது சேலம். அதேபோல செங்கல்பட்டு, இந்த இரண்டு இடங்களுக்கும் கொடுக்க வேண்டியிருக்கிறது. படிப்படியாக அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் இதை வாங்கிக் கொடுப்பது மட்டுமல்லாமல் மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கும்கூட கொடுக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய திட்டமாக இருக்கிறது. எனவே, படிப்படியாக மாவட்டத் தலைநகரிலே இருக்கின்ற மருத்துவமனைகள், அதேபோல கல்லூரி மருத்துவமனைகள் இவை அனைத்திற்கும் இந்த 'ஹோல் பாடி ஸ்கேனர்' வாங்கிக் கொடுப்பதற்கான நடவடிக்கையை அரசு தீவிரமாக எடுத்து வருகிறது. அதற்கு ஒரு 'லாங் டேர்ம் ஸ்கீம்' ஒன்றைப் போட்டு வைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 125, திரு. கி. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.